[1995 ஏப்ரல் 20

செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் திருவள்ளூரில் உள்ள நகர்மன்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இதுவரை முன்மொழிவு வரப்பெறவில்லை. வரப்பெற்றால், உயர்நிலைக் குழுவின் பரிசீலனைக்குப் பின்னர் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொற்காலம் படைத்துவரும், இந்தியத் திருநாட்டிற்கே வழிகாட்டியாகத் திகழும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் 'இல்லை' என்று சொல்லுக்கே இடமில்லை. எனவே, திருவள்ளூர் நகரத்தில் நகர்மன்ற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இந்த ஆண்டே அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 11-10*

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முன்மொழிவு வரப்பெற்றால், இந்த ஆண்டே அது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *378*, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை.

வினா எண் *379*, திரு. டி. வேலையா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

**379—**

**சுத்தமல்லி ஊராட்சியில் திருமண மண்டபம் கட்டுதல்**

**21818*—**திரு. டி. வேலையா:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா --

திருநெல்வேலி தொகுதி, மானூர் ஒன்றியம், சுத்தமல்லி ஊராட்சி ஆதிதிராவிடர் குடியிருப்பில் திருமண மண்டபம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

*1995 ஏப்ரல் 20]*

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், மானூர் ஒன்றியம் சுத்தமல்லி ஊராட்சி ஆதி திராவிடர் குடியிருப்பில் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான இடம், நிதி வசதி மற்றும் தேவை ஆகியவற்றின் அடிப்படையில் வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

**திரு. டி. வேலையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சுத்தமல்லி பகுதியானது, ஆதிதிராவிட மக்களை அதிகமாகக் கொண்ட பகுதியாகும். அங்கே 10 ஊராட்சிகளிலும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகிறார்கள். அது கிராமப்புறம். பின்தங்கிய பகுதி. அங்கே திருமணக்கூடம் இருந்தால், நெடுந்தொலைவுக்குச் சென்று, மண்டபங்கள் பார்க்கவேண்டிய அவசியமில்லாமல், அந்த மக்களுக்கு வசதியாக இருக்கும். நிலம், அரசாங்கத்திற்குச் சொந்தமாக நிறைய இடங்களிலே காலியாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியினுடைய தேவையைக் கருதி, அமைச்சர் அவர்கள் திருமண மண்டபம் அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில், ஆண்டிற்கு 3 சமுதாயக் கூடம் வீதம் 10 இலட்சம் ரூபாயில் கட்டிவந்தோம். ஆதிதிராவிட மக்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்ட தமிழக முதல்வர், எங்கள் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், கிராமப்புறங்களில் இருக்கிற, ஏழை எளிய ஆதிதிராவிட மக்கள், சமுதாயக்கூடம் வேண்டுமென்ற கோரிக்கையை வைக்காமலேயே, அவர்களின் நலன் கருதி, இந்த ஆண்டு 1,000 சமுதாயக் கூடங்களை (மேசையைத் தட்டும் ஒலி) ரூ. 25 கோடி செலவில் கட்ட வேண்டுமென்று உத்தரவிட்ட காரணத்தினால், பரவலாக எல்லாப் பகுதிகளிலும், இந்த ஆண்டு சமுதாயக் கூடங்கள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தவகையிலே, சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையும் வருகிற ஆண்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 380, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.